1979 நவம்பர் 3]

குளத்தூர்பட்டி—சிங்கம்புணரி பேருந்துப்பணி.

* வினா எண். 95—திரு. ச. சண்முகம் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) இராமநாதபுரம் மாவட்டம், திருப்பத்தூர் வட்டம், குளத்தூர் பட்டியிலிருந்து பிரான்மலை வழியாக சிங்கம்புணரி வழி ஓடிக்கொண்டிருந்த பேருந்து நிறுத்தப்பட்டதா?

(ஆ) ஆமெனில் மீண்டும் அவ்வழித்தடத்தில் பேருந்து விடப்படுமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :— (அ) ஆம்.

(ஆ) மீண்டும் 21-5-79 முதல் மேற்படி வழித் தடத்தில் பேருந்து விடப்பட்டுள்ளது.

திரு. கூத்தகுடி ச. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே, நான் இந்தக் கேள்வியைக் கேட்டு ஒரு ஆண்டுக்குப் பிறகு இப்பொழுது தான் விடை வந்திருக்கிறது. அதற்குள் அங்கே பஸ்ஸே விடப்பட்டிருக்கிறது. இருந்தாலும் ஏற்கெனவே ஓடிக்கொண்டிருந்த வழித்தடத்திலிருந்து மாறுபட்டிருக்கிறது. கள்ளம்பட்டி, சிறுகாடு, மன்றம்பட்டி ஆகிய ஊர்களின் வழியாக போக வேண்டிய இந்த வழித்தடம் இப்பொழுது வேறு ஊர்களின் வழியாகப் போகிறது. இந்த வழித்தடத்திலும் பஸ் விடுவதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே, அன்—சர்வ்ட் ஏரியாக்களுக்கும் விடப்பட வேண்டும், அவைகளையும் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டும் என்ற நோக்கத்தோடு பஸ் விடப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய வழித்தடங்களைப் பற்றியும் எழுதி கொடுப்பார்களேயானால், அவைகளிலும் பஸ்ஸை விடுவதற்கு பரிசீலனை செய்கிறேன் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சிவசாமி அவர்களும் திரு. கூத்தகுடி சண்முகம் அவர்களும் தாங்கள் வினா கேட்டு 1 வருடத்திற்கு மேலாகிறது என்றும், இப்போதுதான் அவற்றிற்கு விடை வருகிறது என்றும் குறிப்பிட்டார்கள். திரு. சிவசாமி அவர்கள் 17-2-79லே கொடுத்திருக்கிறார்கள். திரு. கூத்தகுடி சண்முகம் அவர்கள் 3-3-79லே தந்திருக்கிறார்கள். அதற்குப் பிறகு பேரவை இப்போது தான் கூட்டப்பட்டிருக்கிறது. ஆகவே கால தாமதம் என்று சொன்னதை ஏற்றுக்கொள்ள முடியாது.

திரு. கூத்தகுடி ச. சண்முகம் : தலைவர் அவர்களே, நீங்கள் கூறியபடியே 7 மாதங்கள் ஆகிவிட்டன. அதற்கு முன்னாலேயே நான் கேள்வி எழுதிக் கொடுத்திருக்கிறேன். அங்கேயும் பஸ்ஸை அதற்குள் ஓட விட்டு விட்டார்கள். பிரச்னை என்னவென்றால் 1 வருஷத்திற்கும் 7 மாதத்திற்கும் அதிகமாக வித்தியாசம் கிடையாது என்பதுதான்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் எழுதிக் கொடுத்த பிறகு இப்பொழுதுதான் மீண்டும் சட்ட சபை கூடுகிறது. கேள்வி நேரத்திலும் முதல் முதலாக எடுத்துக் கொண்டாகி விட்டது.

சாத்தான்குளம் வழியாக விரைவுப் பேருந்துப் பணி.

* வினா எண் 96—திரு. ர. ஜெயமணி : மாண்புமிகு போக்கு வரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பல்லவன் போக்குவரத்துக் கழகத்தின் நாகர்கோவில் செல்லும் விரைவு வண்டிகளை சாத்தான்குளம் வழியாக விடும் குறிப்பு ஏதும் அரசிடம் உண்டா?

(ஆ) ஆம் எனில் எப்பொழுது முதல் தொடங்கும்?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :— (அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

திரு. ர. ஜெயமணி : தலைவர் அவர்களே, சாத்தான் குளம் பகுதி பின்தங்கிய பகுதியாக இருப்பதினால், அதிக தூரம் செல்லும் பயணிகளுக்கு வசதியாக இருக்கவும் நாகர்கோவில் செல்லும் விரைவு வண்டிகளை சாத்தான்குளம் வழியாக விடப் படுமா என்று கேட்டேன். அமைச்சர் அவர்கள் நெடுந்தூரப் பயணிகளின் குறையைத் தீர்ப்பதற்கு ஏதாவது பாஸ்ட் பாசஞ்சர் பஸ்ஸாவது விட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது ஓடுகிற பேருந்துகள் எல்லாமே விரைவுப் பேருந்துகள். திருநெல்வேலியிலிருந்து நாங்குநேரி, வள்ளியூர் வழியாகச் செல்கின்றன. நாசரத், சாத்தான்குளம் வழியாகப் போகிறபோது மேற்கொண்டு 25 மைல் அதிகமாகச் செல்கிற நிலைமை ஏற்படும் என்று கருதப்பட்டது. வேண்டுமானால் ஓரிரு பேருந்துகளை இந்த வழியாக, முக்கியமாக சாத்தான்குளம் வழி